இபி 1/2018 ஒ.எஸ் 118/ 2015 நாள்=26.02.2019

எம.சா. 1 திரு.சேகர் த/பெ.மொட்டையன

குறுக்கு விசாரணை= நான் தேவலாபுரத்தில் வசிக்கிறேன். மனுதாரரை எனக்கு தெரியும். அ.வ.எண்.118/2015 வழக்கானது முழுமையாக விசாரித்து தீர்ப்பு வழங்கப்பட்டு அதன் பேரில் இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றால் சரிதான். அந்த தீர்ப்பின் விவரம் நன்கு தெரியும் என்றால் சரியல்ல. அந்த தீர்ப்பின் பேரில் நான் மேல் முறையீடு செய்யவில்லை. எனக்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாக வறியவர் மனு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தற்போது வேலை எதுவும் செய்யவில்லை. நான் மேஸ்திரி வேலை செய்வதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பொதுவாக மேஸ்திரி வேலைக்கு சென்றால் தினசரி கூலி எவ்வளவு வருமென்றால் ரூ.350 வரும். நான் தற்போதும் வேலைக்கு செல்கிறேன் என்றாலும், தீர்ப்பு தொகையை ஏமாற்ற வேண்டி வேலைக்கு செல்லாததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்திலேயே வேலைக்கு செல்வதாக ஒப்புக்கொண்டு தற்போது மாற்றி பொய்யாக சொல்கிறேன் என்றாலும் தீர்ப்பு தொகையை செலுத்த எனக்கு தகுதி உள்ளதென்றாலும் சரியல்ல.